பிளாஸ்டர் ஆப் பாரிஸ் என்ற பாரிஸ் சாந்து ஜிப்சம் பாறைகளிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இது உடைந்த எலும்புகளை நிலைநிறுத்துவதற்கான கட்டு போடவும், சுவர்கள், கூரை அலங்கார வேலைகளுக்கும் மற்றும் வார்ப்புருக்கள் தயாரிக்கவும் பயன்படுகிறது. இது முதன்முதலில் பாரிஸ் நகரில் பயன்படுத்தப்பட்டதால் இப்பெயர் பெற்றது.

ஓசோன் படலம் என்பது அடுக்கு மண்டலத்தில் உள்ள ஓசோன் வாயுவின் (O3) அடர்த்தியான பகுதியாகும்.இது சூரியனிலிருந்து வரும் தீங்கு விளைவிக்கும் புறஊதா கதிர்வீச்சின் பெரும்பகுதியை உறிஞ்சி, பூமியில் உள்ள உயிரினங்களை கடுமையான நோய்களிலிருந்து பாதுகாக்கிறது. இது பூமியின் இயற்கையான பாதுகாப்பு கவசம் போன்றது.

மதுரை விமான நிலைய விரிவாக்கத்துக்கு நிலம் அளித்த

கிராம மக்களுக்கான மறுவாழ்வு பணிகளை தெரிவிக்க உத்தரவு

மதுரை

மதுரை விமான நிலைய விரிவாக்கத்துக்காக நிலம் கையகப்படுத்தப்பட்ட சின்ன உடைப்பு கிராமத்தினருக்கான மறுவாழ்வு பணிகள் குறித்து புள்ளி விவரங்களுடன் பதில் மனு தாக்கல் செய்ய அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை மாவட்டம் சின்ன உடைப்பு பகுதியை சேர்ந்த லட்சுமி உள்ளிட்ட 200-க்கும் மேற்பட்டோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

மதுரை விமான நிலையம் அருகேயுள்ள சின்ன உடைப்பு கிராமத்தில் 350 குடும்பங்கள் வசிக்கின்றன. இந்நிலையில், விமான நிலைய விரிவாக்கப் பணிக்காக சின்ன உடைப்பு கிராமத்தில் நிலம் கையகப்படுத்தப்பட்டு இழப்பீடு வழங்கப்பட்டது. ஆனால் மறு குடியமர்வு மற்றும் மறுவாழ்வு பணிகள் தொடர்பாக முடிவெடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக அதிகாரிகளிடம் முறையிட்டும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. ஆனால் மக்களை வெளியேற்றும் நோக்கில் மாவட்ட நிர்வாகம் செயல்பட்டு வருகிறது. எனவே, மறுவாழ்வு, மறுகுடியமர்வு வசதிகளை செய்து தராமல், நிலம் கையகப்படுத்துதல் விதிகளை அமல்படுத்துவது செல்லாது என உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே.ராமகிருஷ்ணன் அமர்வு விசாரித்தது.

மனுதாரர் தரப்பில், தொழிலக நடவடிக்கைகளுக்காக இடத்தை கையகப்படுத்தும்போது, போதுமான இழப்பீடு மற்றும் மறு குடியமர்வு, அதற்கான உள் கட்டமைப்பு வசதிகள் செய்யப்படுவது அவசியம். புதிய சட்டம் அமல்படுத்தப்பட்ட பின்னர் அதற்கான விதிகள் வகுக்கப்படவில்லை. மக்களை குடியமர்வு செய்யும்போது வீடு, மின்வசதி, நியாயவிலைக் கடை உள்ளிட்ட வசதிகள் செய்து தரப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அப்போது நீதிபதிகள், வீடுகள் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றனர்.

மனுதாரர் தரப்பில், அனைத்து மறுவாழ்வு வசதிகள் செய்யப்பட்ட பிறகே, கையகப்படுத்தப்பட்ட இடங்களில் பணிகளை தொடங்க முடியும் எனக் கூறப்பட்டது.

அரசு தரப்பில், பழைய விதி இருக்கும்போதே நிலம் கையகப்படுத்தப்பட்டு விட்டது. புதிய விதி வந்த பின்னர் அதன் அடிப்படையில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுவிட்டது. தற்போது மறுகுடியமர்வு கேட்கிறார்கள். அதற்கான இடம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இருப்பினும் மக்கள் அங்கிருந்து காலி செய்ய விரும்பவில்லை எனக் கூறப்பட்டது.

அதற்கு நீதிபதிகள், நிலம் தந்தவர்களுக்கு வசதிகளை செய்து தர வேண்டும்தானே? அவர்களுக்காக வீடுகள் கட்டப்படும் இடத்தில் அவர்கள் எப்போது குடியேறலாம்? என்று கேள்வி எழுப்பினர். மேலும், இது தொடர்பாக புள்ளி விவரங்களுடன் விரிவான பதில் மனு தாக்கல் செய்ய அரசுக்கு உத்தரவிட்டு, விசாரணையை பிப். 9-க்கு தள்ளி வைத்தனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில்

மார்க்சிஸ்ட் கட்சியினர் இருசக்கர வாகன பிரச்சாரம்

திண்டுக்கல்

மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் திண்டுக்கல் மாவட்டத்தில் இருசக்கர வாகனப் பிரச்சாரப் பயணம் நடைபெற்றது.

மக்கள் ஒற்றுமை, மத நல்லிணக்கத்தை வலியுறுத்தியும், தொழில், விவசாய வளர்ச்சியை முன்னிறுத்தியும் மாவட்டத்தின் 6 பகுதிகளில் இருந்து இருசக்கர வாகனப் பிரச்சாரப் பயணம் நேற்று தொடங்கியது. நத்தத்தில் இருசக்கர வாகனப் பிரச்சாரப் பயணத்தை திண்டுக்கல் எம்.பி. ஆர்.சச்சிதானந்தம் கொடியசைத்துத் தொடங்கிவைத்தார். நிலக்கோட்டையில் மார்க்சிஸ்ட் மாநிலக் குழு உறுப்பினர் மதுக்கூர் ராமலிங்கம் இருசக்கர வாகனப் பிரச்சாரப் பயணத்தைத் தொடங்கிவைத்தார். மாவட்டத்தின் பல முனைகளில் இருந்து வந்த பிரச்சாரப் பயணம் நேற்று மாலை திண்டுக்கல்லை வந்தடைந்தது. தொடர்ந்து பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கனரா வங்கி Canara Bank — A Government of India Undertaking — Syndicate

கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை, செயின்ட் மேரிஸ் வளாகம், வட்ட அலுவலகம், முதல் தளம், கீழ வெளி வீதி, மதுரை–625001.

விற்பனை அறிவிப்பு (அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு)

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு, பிணைச் சொத்து பாதுகாப்பு அமலாக்கச் சட்டம் 2002 & பிணைக் காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002–இன் விதி 8(6)–இன் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு. இதன் மூலம் பொது மக்கள் & குறிப்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) & அடமானதாரர்(கள்) ஆகிய அனைவருக்கும் அறிவிப்பது யாதெனில், எங்கள் வங்கியின் கடன்தாரர் : **M/s.பிரகாஷ் காட்டேஜ் இண்டஸ்டரிஸ்,** அதன் பார்ட்னர்கள்–**திரு.M.செல்வப்ரகாஷ் & திருமதி.M.சாந்தி** ஆகியோர் கனரா வங்கி, மதுரை சொத்து மீட்பு மேலாண்மை கிளைக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை 31.01.2026 அன்று ரூ.**91,45,414.71** (ரூபாய் தொன்னூற்று ஒன்று இலட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து நாநூற்று பதினான்கு & பைசா எழுபத்தொன்று மட்டும்) + 01.02.2026 முதல் வட்டி & பிற செலவினங்கள் சேர்த்து வங்கி வசூலிக்கும் பொருட்டு, கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை மதுரை கிளையின் அங்கீகாரம் பெற்ற அதிகாரியால் அடையாள உடமையாக்கப்பட்டுள்ள பின்வரும் அசையா சொத்துக்களை, “எங்கு உள்ளதோ”, “எப்படி உள்ளதோ”, “எந்நிலையில் உள்ளதோ அப்படியே” என்ற முறையில் **25.02.2026** அன்று மின்னணு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

அசையா சொத்து விவரம் : உரிமையாளர் பெயர் – திருமதி.M.சாந்தி & திரு.M.செல்வப்ரகாஷ்.

மதுரை மாவட்டம், மதுரை தெற்கு பதிவு மாவட்டம், மதுரை இணை IV சார் மாவட்டம், மதுரை தெற்கு தாலுகா, மதுரை மாநகராட்சி, மாடக்குளம் கிராமம், ஜெய்ஹிந்த்புரம் மெயின் ரோடு, என்.எஸ்.கோனார் தெரு, பழைய சர்வே எண்.259, புதிய சர்வே எண்.46/2, தற்போது கதவு எண்.13B, சொத்து வரி எண்.114676, இதில் உள்ள சொத்தானது கிழமேல் வடக்கே 70 அடி, தெற்கே 70 அடி, தென்வடல் மேற்கே 23 அடி, கிழக்கே 23 அடி. மொத்தம் 1610 சதுரடி கொண்ட சொத்தின் **நான்கு மால் :** வடக்கே–நீலமேகம், பிறர் சொத்து & பொது வழிப்பாதை, கிழக்கே–M.துரைராஜ் & M.ராஜேந்திரன் ஆகியோருக்கு விற்கப்பட்ட சொத்து, தெற்கே–நீலமேகம், பிறர் சொத்து & ¾ அடி பொதுச் சுவர், மேற்கே–என்.எஸ்.கோனார் தெரு.

சொத்திற்கான நிர்ணயிக்கப்பட்ட விலை :ரூ.**95,52,000/-** (தொன்னூற்றைந்து இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் மட்டும்)

முன்வைப்புத் தொகை : ரூ.**9,55,200/-** (ஒன்பது இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து இருநூறு மட்டும்)

ஏல விற்பனை தேதி & நேரம் : 25.02.2026 அன்று பகல் 12.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை. முன் வைப்புத் தொகை செலுத்துவதற்கு கடைசி நாள் 24.02.2026 மாலை 4.00 மணி வரை.

விரிவான விற்பனை விதிகள் & நிபந்தனைகளுக்கு வங்கியின் இணையதள முகவரியான **“https://baanknet.com/”** என்ற லிங்கில் சென்று பார்க்கவும் அல்லது **கனரா வங்கி, மதுரை சொத்து மீட்பு மேலாண்மை கிளை, முதன்மை மேலாளரை** (தொலைபேசி எண் : **0452-2335348,** அலைபேசி எண் : **94890 46509)** அனைத்து வேலை நாட்களிலும் வேலை நேரத்தில் அணுகித் தெரிந்து கொள்ளலாம்.

நாள் : 05.02.2026 — **அங்கீகாரம் பெற்ற அதிகாரி**
இடம் : மதுரை — **கனரா வங்கி**

மருதம் மக்கள் முன்னேற்றக் கழக நிர்வாகக் குழு கூட்டத்தில் பங்கேற்ற, அதன் பொதுச்செயலாளர் சந்தனபிரியா பசுபதிபாண்டியன் உள்ளிட்டோர்.

மதுரை சிறையில் மனநல ஆலோசகர் பணி

மதுரை

மதுரை மத்திய சிறையில் காலியாக உள்ள ஒரு மன நல ஆலோசகர் பணியிடத்துக்கு விண்ணப்பிக்கலாம் என மாவட்ட நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை மத்திய சிறையில் மனநல ஆலோசகருக்கான காலிப் பணியிடம் ஒன்று உள்ளது. இப்பணியிடம் மதிப்பூதிய அடிப்படையில் நியமிக்கப்படவுள்ளது. இப்பணிக்கு, உளவியல் மற்றும் சமூகவியலில் முதுகலைப் பட்டம் பெற்றிருத்தல் அவசியம். மனநல ஆலோ சகராக நிறுவனங்களில் பணியாற்றியிருக்க வேண்டும். மாத ஊதியம் ரூ.25 ஆயிரம் வழங்கப்படும்.

இப்பணிக்குத் தகுதியானோர் சுயவிவரக் குறிப்புடன் சிறைகண்காணிப்பாளர் மத்திய சிறை, மதுரை என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ வரும் 28-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவை தேர்தலில்

அதிமுகவுக்கு ஆதரவளிப்போம்

மமமுக பொதுச்செயலாளர் தகவல்

மதுரை

வரும் சட்டப்பேரவை தேர்தலில் அதிமுகவுக்கு நிபந்தனையற்ற ஆதரவு அளிப்போம் என மருதம் மக்கள் முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் சந்தனபிரியா பசுபதிபாண்டியன் மதுரையில் நேற்று தெரிவித்தார்.

மதுரையில் நேற்று மருதம் மக்கள் முன்னேற்றக் கழகம் (மமமுக) மற்றும் தமிழ்நாடு தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பு சார்பில் மாநில நிர்வாகக்குழு கூட்டம் நடைபெற்றது. மமமுக பொதுச்செயலாளர் சந்தனபிரியா பசுபதிபாண்டியன் தலைமை வகித்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: கடந்த மக்களவைத் தேர்தலில் அதிமுகவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியதுபோல், வரும் சட்டப்பேரவைத் தேர்தலிலும் அக்கட்சிக்கு ஆதரவு அளிப்போம். அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியை சந்தித்து ஆதரவு தெரிவிக்கவுள்ளோம்.

தேவேந்திர குல வேளாளர்களை திமுகவினர் ஓட்டுக்காக மட்டுமே பயன்படுத்துகின்றனர். பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரன் மணி மண்டபம் அமைப்பதாக அறிவித்து விட்டு நினைவு அரங்கத்தை கட்டியுள்ளனர். திமுகவில் சமூக நீதியை கடைப்பிடிப்பதில்லை. தமிழகத்தில் 70 தொகுதிகளில் வெற்றியை தீர்மானிக்கும் இடத்தில் உள்ளோம். நாங்கள் தேர்தலில் போட்டியிடுவது குறித்து பழனிசாமிதான் முடிவெடுப்பார். திமுக தேர்தல் வாக்குறுதியின்படி தூய்மைப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

I , BABYANUKALA born on 21/09/1981 (Native District : Kannyakumari) Residing at : 31,Sargunaveethi , Ramavarmapuram , Nagercoil Dt-629001. Tamilnadu. shall henceforth be known as ANU A.

CHANGE OF NAME

I, CHANDRAKALA KUMARESAN W/o. E.R. Kumaresan, aged about 72 years (Native District: Madurai) Residing at No. 137, East 5th Main Street, K.K. Nagar, Madurai - 625 020. Tamilnadu. Shall henceforth be known as E.K. CHANDRAKALA

MADURAI, 05-02-2026 CHANDRAKALA KUMARESAN

CHANGE OF NAME

I, KATTA MEERAN ROOHUL RASHEED THAHMITHA, born on 02.11.2004 (Native District: Sivagangai), residing at 26, Periya Meeran Street, ilyangudi, Sivagangai-630 702, Tamilnadu, shall henceforth be known as ROOHUL RASHEED THAHMITHA

- Katta Meeran Roohul Rasheed Thahmitha

CHANGE OF NAME

I, SASIREGA PREMKUMAR, Born on 29-12-1965 (Native District: Madurai) Residing at Flat No. F-G 02, Mithra Sector, Agirni Enclave, Andalpuram, Madurai - 625 003. Tamilnadu. Shall henceforth be known as GUJULUVA RENGARAO SASIREGA (G.R. SASIREGA)

MADURAI SASIREGA PREMKUMAR

ஆட்கள் தேவை

மார்கெட்டிங்

MNC looking for Field Sales Executives for Coimbatore office. Salary PF Incentives. Contact 7558998946

பொது

விற்பனை

ஆயுதப்படை காவலர் தற்கொலை

மதுரை



முகமது பரூக்

மனைவி பிரிந்து சென்ற சோகத்தில் இருந்த மதுரை ஆயுதப்படை காவலர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

மதுரை ரிசர்வ் லைன் குடியிருப்பில் வசித்தவர் முகமது பரூக் (28). இவர் 6-வது பட்டாலியன் பிரிவில் காவலராக பணிபுரிந்தார். இவரது மனைவி பர்வீன் நிஷா. இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள். அண்மையில் இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. பர்வீன் நிஷா கணவரை பிரிந்து செல்லூரில் உள்ள தனது பெற்றோர் வீட்டுக்குச் சென்றுவிட்டார்.

இதனால் வேதனையடைந்த முகமது பரூக், கடந்த சில நாட்களாக வேலைக்குச் செல்லாமல் வீட்டில் இருந்துள்ளார். கடும் மன அழுத்தத்தில் இருந்த அவர், நேற்று முன்தினம் மனைவியிடம் செல்போனில் பேசி, வீட்டுக்கு வருமாறு அழைத்துள்ளார். அவர் வரவில்லை. இதையடுத்து, முகமது பரூக் வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து தல்லாகுளம் போலீஸார் விசாரிக்கின்றனர்.

इंडियन बैंक Indian Bank

இன்வெஸ்டார் சர்வீசஸ் செல், கார்பொரேட் அலுவலகம், 254-260, அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014

பொது அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட கீழ்க்கண்ட பங்குப் பத்திரம்(கள்) தொலைந்து அல்லது தவற விடப்பட்டு அல்லது திருடப்பட்டிருப்பதாகவும் அந்த பங்குப் பத்திரங்களில் பதியப்பட்ட உரிமையாளர்கள் அந்த பத்திரங்களுக்கு பதிலாக நகல் பங்குப் பத்திரம்(கள்) வழங்குமாறு வங்கியிடம் விண்ணப்பித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.	பங்குதாரரின் பெயர்	ஃபோலியோ எண்	பங்குகளின் எண்ணிக்கை	பத்திர எண்	தனித்துவமான எண் இருந்து	தனித்துவமான எண் வரை
1.	பிரநெஸ்ப்ரிதி மண்டல்	00017394	23	17409	609048638	609048660
2.	ஷியோ குமார் (ஷிவ் குமார் ஜெய்ஸ்வால்)	00041351	207	41366	610161558	610161764
3.	ஜனார்தன் பேனர்ஜி	00012121	11	12136	608971678	608971688
4.	ரோஷன் குமார் சா	00027042	34	27057	609356392	609356425
5.	அருண் பரன் மித்ரா JT: அஷிட் பரன் மித்ரா	00010785	11	10800	608956982	608956992
6.	சிதேஷ் சந்திரா பேனர்ஜி (இறந்தவர்) JT: ஷியாமா பிரசாத் பேனர்ஜி	00039210	69	39225	609988820	609988888
7.	பிரபாகர் A S	00027804	34	27819	609382094	609382127
8.	துர்கா ராவ் V	24472	34	24487	609269132	609269165
9	சாபித்ரி தேவி (சாவித்ரி தேவி)	00038167	69	38182	609917235	609917303
10.	உமா நாராயணன் Jt1: நாராயணன்	00000187	11	202	608801395	608801405
11.	முகமது அஷ்ரத்	00036927	57	36942	609836884	609836940
12.	முகமது அன்வர்	00036928	57	36943	609836941	609856997
13.	உஸ்மா பெர்வீன் (உஸ்மா பர்வீன்)	00029868	46	29883	609465297	609465342
14.	நாக ராஜேந்திர குமார் ரெட்டி K	00028438	34	28453	609403581	609403614
15.	சுதிர் குமார் ஜெயின்	00034955	57	34970	609724662	609724718
16.	ராஜேந்திர பிரசாத் கனோஜியா	00022081	34	22096	609188056	609188089

மேற்கூறிய பங்குப் பத்திரம்(கள்) சம்பந்தமாக யாருக்கேனும் ஏதேனும் உரிமை கோருவதாக இருப்பின் இந்த விளம்பரம் பிரசுரிக்கப்படும் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்றம் செய்யும் ஏஜென்ட்டிடம், அதாவது **கேமியோ கார்பொரேட் சர்வீஸஸ் லிமிடெட்,** மின்னஞ்சல்: **investor@cameoindia.com** என்ற முகவரியில் உரிமைகோர வேண்டும். இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்கு மேல் வரும் எந்த உரிமை கோரலும் அனுமதிக்கப்பட மாட்டாது. பதிவாளர் நகல் சான்றிதழ்(கள்) வழங்கத் தொடர்வார்.

இந்தியன் வங்கி

இடம் : சென்னை — **தினா நாத் குமார்**
தேதி : 05.02.2026 — **உதவி பொது மேலாளர் & நிறுவனச் செயலாளர்**

कॅनरा बैंक **கனரா வங்கி** — சிண்டிகேட் — ஒரு இந்திய அரசு நிறுவனம்

சொத்து மீட்பு மேலாண்மை கிளை
புனித மேரி வளாகம், வட்ட அலுவலகம், முதல் தளம், கீழ வெளி வீதி, மதுரை--625 001

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002இன் விதி 8(6)இன் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்கள் & குறிப்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகிய அனைவருக்கும் அறிவிப்பது யாதெனில், எங்கள் வங்கியின் கடன்தாரர்கள் **1. திரு. செந்தில்வேல் K. 2. திருமதி. சரண்யா S** ஆகியோர் மதுரை சொத்து மீட்பு மேலாண்மை கிளைக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத்தொகை **31.01.2026** ஆம் தேதிப்படி **ரூ. 44,05,129.28/–** (ரூபாய் நாற்பத்து நான்கு இலட்சத்து ஐந்தாயிரத்து நூற்று இருபத்தொன்பது மற்றும் இருபத்தெட்டு பைசா மட்டும்) + **01.02.2026** ஆம் தேதி முதல் வட்டி மற்றும் இதர செலவினங்கள் சேர்த்து வங்கி வசூலிக்கும் பொருட்டு, **கனரா வங்கியின் விக்கிரமங்கலம் கிளையின்** அங்கீகாரம் பெற்ற அதிகாரியால் உடைமையாக்கப்பட்ட பின்வரும் அடமான அசையா சொத்துக்களை **“எங்கு உள்ளதோ” “எப்படி உள்ளதோ” “எந்நிலையில் உள்ளதோ”** அப்படியே என்ற முறையில் **25.02.2026** அன்று மின்னணு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

அசையா சொத்து விவரம்: திரு. செந்தில்வேல் K பெயரில் உள்ள சொத்து: மதுரை மாவட்டம், மதுரை தெற்கு பதிவு மாவட்டம், மதுரை சார் பதிவு மாவட்டம், மதுரை தெற்கு தாலுகா, நல்லூர் கிராமம் புஞ்சை பழைய சர்வே எண். 261/1A, பழைய பட்டா எண். 1187, புதிய பட்டா எண். 1410இன்படி ஹெக்டேர் 1.37.0 அளவிடும் அதாவது 3 ஏக்கர் 38 சென்ட் நிலத்தில் தெற்குப் பக்கத்தில் 1 ஏக்கர் மற்றும் 50 சென்ட் நிலத்தில் பல மனைகளாகப் பிரிக்கப்பட்டு மனை எண் 14இன் துணைப் பிரிப்பு பட்டா எண் 1782 துணைப் பிரிப்பு சர்வே எண். 261/1A2இன் புதிய மறு சர்வே எண். 261/1A2Aஇல் கட்டப்பட்ட கட்டிடம். **எல்லை: வடக்கு:** 20 அடி அகல கிழக்கு-மேற்கு பொதுச் சாலை, **கிழக்கு:** காலியாக உள்ள மனை எண். 15, **தெற்கு:** கருப்பையாவின் நிலம், **மேற்கு:** காலியாக உள்ள மனை எண். 13, மேற்கூறிய எல்லைகளுக்குள் கிழக்கு முதல் மேற்கு வரை வடக்குப் பக்கத்தில் 33 அடி, தெற்குப் பக்கத்தில் 33 அடி, தெற்கு முதல் வடக்கு வரை மேற்குப் பக்கத்தில் 53 அடி, கிழக்குப் பக்கத்தில் 55 அடி என மொத்தம் 1782 சதுர அடி காலியான இடம் மற்றும் அதன் சாலைப் பகுதி 330 சதுர அடி, இதன் மூலம் மொத்தம் 2112 சதுர அடி நிலத்தில் கட்டப்பட்ட கட்டிடத்தின் அனைத்து உபகரணங்களும், வாசல், கதவுகள், ஜன்னல்கள், கழிப்பறை குளியலறை, மின்சார சேவை இணைப்பு மற்றும் அதன் வைப்புத் தொகை, மோட்டார் போர்வெல் மற்றும் மேற்கூறிய சொத்தின் ஒவ்வொரு பகுதியும் அடங்கும். மேலே கூறப்பட்ட சொத்து நல்லூர் பஞ்சாயத்தில் கதவு எண் 2/380Aஇன் வீட்டு வரி ரசீது எண் 414.

நிர்ணயிக்கப்பட்ட விலை: ரூ. 13,70,000/– (ரூபாய் பதிமூன்று இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்)
முன்வைப்புத் தொகை: ரூ. 1,37,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தேழாயிரம் மட்டும்)

மின்னணு ஏல விற்பனை தேதி : 25.02.2026
முன்வைப்புத் தொகை செலுத்துவதற்கு கடைசி நாள் : 24.02.2026 மாலை 4.00 மணி வரை

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு “https://baanknet.com/” என்ற வலைத்தளத்தைப் பார்க்கவும் அல்லது கனரா வங்கி, மதுரை சொத்து மீட்பு மேலாண்மை கிளை, முதன்மை மேலாளரை (தொலைபேசி எண். 0452-2335348 செல் எண். 94890 46509) அனைத்து வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் அணுகி தெரிந்து கொள்ளலாம்.

இடம் : **மதுரை** — **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
தேதி : **04.02.2026** — **கனரா வங்கி**

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, “உள்ளது உள்ளவாறு” மற்றும் “உள்ள இடத்தில் உள்ளவாறு” எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்	கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
	கிளை அலுவலகம்: எண்.1,1/109, தென்கரை, கம்பம் ரோடு, பெரியகுளம், தேனி, தமிழ்நாடு-625601				
1.	1602210170000134 / 1. Mr.பாண்டியராஜன் 2. Mr.S.கோவிந்தன், 3. Mrs.தமிழ்செல்வி கோவிந்தன்	(I) 12.02.2025 & 29.01.2025 அன்றுள்ளபடி ₹ 8,20,774/- (ரூபாய் எட்டு லட்சத்து இருபதாயிரத்து எழுநூற்று எழுபத்து நான்கு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 13.05.2025 & நேரடி சுவாதீனம் - 15.07.2025	27.01.2026 அன்றுள்ளபடி ₹ 10,67,164.36 (ரூபாய் பத்து லட்சத்து அறுபத்து ஏழாயிரத்து நூற்று அறுபத்து நான்கு மற்றும் பைசா முப்பத்தாறு மட்டும்)	₹ 9,75,000/- (ரூபாய் ஒன்பது லட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்)	₹ 97,500/- (ரூபாய் தொண்ணூற்று ஏழாயிரத்து ஐநூறு மட்டும்)

சொத்து விவரம்: பெரியகுளம் பதிவு மாவட்டம், தேனி சார்-பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட, தேனி மாவட்டம், **உப்பார்பட்டி கிராமம், தென்-கிழக்கு பகுதியில் உள்ள சொத்து, வார்டு எண்.5, ஹரிஜன் காலனி, நத்தம் சர்வே எண்.252/1A-ல் பாகம் பிரிக்கபட்ட புதிய நத்தம் சர்வே எண்.252/8-ல் 0-00.80 சதுர மீட்டர், நத்தம் செட்டில்மெண்ட் பட்டா எண்.4-ன் படி பரப்பு 871.2 சதுர அடி வீட்டு மனை,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: மேற்கு: பொது நிலம் மற்றும் P.சுப்ரமணி வீடு, தெற்கு: கிழக்கு-மேற்கு வழிப்பாதை, வடக்கு: கிழக்கு-மேற்கு வழிப்பாதை, கிழக்கு: R.குந்தசாமி பிள்ளை சொத்து. அளவுகள்: கிழக்கு மேற்காக 8 மீட்டர் அல்லது 26.4 அடி, வடக்கு தெற்காக 10 மீட்டர் அல்லது 33 அடி, ஆகமொத்தம் 871.2 சதுர அடி அல்லது 0.02 சென்ட் மற்றும் அதனுடன் அனைத்து வழக்கமான உரிமைகள்.

மேலே குறிப்பிட்டுள்ள சொத்தானது **Mr.S.கோவிந்தன்**-க்கு சொந்தமானது (உங்களில் எண்.2-ல் உள்ள நபர்).

வ. எண்	கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
	கிளை அலுவலகம்: எண்.1,1/109, கம்பம் மெயின் ரோடு, தென்கரை, பெரியகுளம், தேனி மாவட்டம், தமிழ்நாடு-625601				
2.	1602210170000026 / 1.Mr. ஜெயராமன் M 2.Mrs. ரேவதி J	(I) 13.07.2021 & 12.07.2021 அன்றுள்ளபடி ₹ 9,75,915/- (ரூபாய் ஒன்பது லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து பதினைந்து மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 09.03.2022 & நேரடி சுவாதீனம் - 24.05.2025	27.01.2026 அன்றுள்ளபடி ₹ 23,33,635.91 (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து அறுநூற்று முப்பத்தைந்து மற்றும் பைசா தொண்ணூற்று ஒன்று மட்டும்)	₹ 13,92,000/- (ரூபாய் பதிமூன்று லட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரம் மட்டும்)	₹ 1,39,200/- (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து இருநூறு மட்டும்)

சொத்து விவரம்: திண்டுக்கல் பதிவு மாவட்டம், வத்தலகுண்டு சார்பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட சர்வே எண்.223/1, பரப்பு 0.98.5 ஹெக்டேர் அல்லது 2 ஏக்கர் 43 சென்டு நிலம் பல்வேறு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு இதில் **மனை எண்.38, பொன்னையாதேவர் தெரு, கெங்குவார்பட்டி கிராமம் மற்றும் டவுன் பஞ்சாயத்து, பெரியகுளம் தாலுகா, தேனி மாவட்டம் என்னும் முகவரியில் 2194 ½ சதுர அடி நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள வீட்டு கட்டிடம், அதன் கதவு எண்.2.2.14A, சொத்து வரி மதிப்பீடு எண்.2737** மற்றும் அதனுடன் டெபாசிட்டுகள் மற்றும் பிற அனுமந்த உரிமைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு மற்றும் தெற்கு திசையில் 44 அடி, மேற்கு திசையில் 49 ½ அடி, கிழக்கு திசையில் 50¼ அடி, ஆகமொத்தம் 2194 ½சதுர அடி. எல்லைகள்: வடக்கு: மனை எண்.18, கிழக்கு: மனை எண்.37, தெற்கு: மனை எண்.39, மேற்கு: 15 அடி கிழக்கு-மேற்கு பொது வழிப்பாதை. சப்-டிவிஷன் சர்வே எண்.223/1A1A1.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 25.02.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
24.02.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	23.02.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : **Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டிஜோ சாஜன் – 78451 92961.**

இ-ஏலமானது “உள்ளது உள்ளவாறு” மற்றும் “உள்ள இடத்தில் உள்ளவாறு” எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. **(தொடர்புக்கு Mr.பிரபாகரன் Mob.74182 81709)** உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.

i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 06.02.2026 — **ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

நகரில் நடப்பவை

மதுரை

- தை மாத சிறப்பு நிகழ்ச்சி, தமிழ் இசைச் சங்கம், வில்லிபாரதம் தொடர் சொற்பொழிவு, தலைப்பு- ஸ்ரீகிருஷ்ணன் தூது, பேசுபவர்- திருச்சி கல்யாணராமன், ராஜா முத்தையா மன்றம், மாலை 6.30.
- ஆன்மிக இலக்கியப் பொழிவு, மதுரைத் திருவள்ளுவர் கழகம், தலைப்பு- திருக்குறள், பேசுபவர்-சந்தானம், வடக்காடி வீதி, இரவு 7.
- இலக்கிய நிகழ்வுகள், திருவள்ளுவர் மன்றம், தலைப்பு- திருமந்திரம், பேசுபவர்- திருமாவளவன், சக்தி வேலம்மாள் நகர், மாலை 6.
- சர்வ சமய அமைதி பிரார்த்தனை, செப்சிரா, சேவாலய மாணவர் இல்லம், ஷெனாய் நகர், மாலை 6.
- கொடியேற்றம், புனித லூர்தன்னை திருத்தலம், கோ.புதூர், மாலை 5.30.
- தியாகராசர் கல்லூரி வணிகவியல் துறை சார்பில் தேசிய கருத்தரங்கு, தெப்பக்குளம், காலை 9.30.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின் மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by Sri R.Barathan, Indian, Survey Nos. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).